# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/50 - 2019 ජනවාරි මස 25 වැනි සිකුරාදා - 2019.01.25

*2107/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/ 2012* (III).

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*இந்திய சமுத்திர ரியூனா ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பேணிக்காத்தல் மற்றும் முகாமைத்துவ வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

காமினி விஜித் விஜயமுனி சொய்சா,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள்
அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார
அமைச்சர்.

கொழும்பு,
*2018, நவெம்பர் 09.*

ஒழுங்குவிதிகள்

*2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள், அவற்றின் 6 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

"7. இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள், ஆழ்கடலினுள் அல்லது வேறேதேனும் கரையோர அரசின் பிரத்தியேக பொருளாதார வலயத்தினுள் வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட ஒரு மீன்பிடிக் கலத்தில் சேவையாற்றுகின்ற இலங்கைப் பிரசையெவரும், ஏதேனும் சட்ட விரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிச் செயற்பாட்டில் ஈடுபடுதலாகாது.".

*02-383*


1A - PG 4369 — 2767 (2019/01 ) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.